**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**சுய கற்றல் கையேடு - 2020**
**சித்திரம்**

**தரம் 6**

## வர்ணங்கள்

1. மூலவர்ணங்கள் எவை?
   சிவப்பு, மஞ்சள், நீலம்

2. மூலவர்ணங்களின் மறுபெயர்கள் எவை?
   முதல் வர்ணம், ஆரம்ப வர்ணம், அடிப்படை வர்ணம், தூயவர்ணம்

3. கலப்பு வர்ணங்கள் எவை?
   பச்சை, செம்மஞ்சள், ஊதா

4. பின்வரும் வர்ணங்களின் எதிர்வர்ணங்கள் எவை?
   சிவப்பு – பச்சை
   மஞ்சள் – ஊதா
   நீலம் – செம்மஞ்சள்

5. பின்வரும் வர்ணங்களின் அயல் வர்ணங்கள் எவை?
   சிவப்பு – ஊதா, செம்மஞ்சள்
   மஞ்சள் – செம்மஞ்சள், பச்சை
   நீலம் – ஊதா, பச்சை

6. பொதுவர்ணங்கள் எவை?
   கறுப்பு, வெள்ளை


7. வெப்பவர்ணங்கள் எவை?
   சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள்

8. குளிர் வர்ணங்கள் எவை?
   நீலம், பச்சை, ஊதா

9. முன்செல்லும் தன்மையுடைய வர்ணங்கள் எவை?
   வெப்ப வர்ணங்கள் (சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள்)

10. பின்செல்லும் தன்மையுடைய வர்ணங்கள் எவை?
    குளிர் வர்ணங்கள் (நீலம், பச்சை, ஊதா)


**வர்ணச்சக்கரம்**




## இரேகைகள்


**பின்வரும் இரேகைகளை அறிவோம்.**


கிடைரேகை 


சாய்வுரேகை 

சமாந்தரரேகை 

செங்குத்துரேகை 


வட்டரேகை 

வளைரேகை 

நீள்வட்டரேகை 

முறிரேகை 

ஒழுக்குரேகை 

சுருள்ரேகை 

## பண்டிகைகள்

### வெசாக் பண்டிகை

- வெசாக் பௌர்ணமி தினம் சித்தார்ந்த குமாரனின் பிறப்பு, புத்தர் நிலையை அடைதல், பரிநிர்வாணமடைதல் ஆகிய மூன்று நிகழ்வுகளை முன்னிறுத்தி கொண்டாடப்படுவதாகும்.
- பௌத்த வழிபாட்டு தலங்களை மையமாக கொண்டு இப்பண்டிகை நடத்தப்படும்.
- பௌத்தர்கள் சீலம்களித்தல், போதி பூசை நடத்துதல், அன்னதானம் வழங்குதல், ஒலிப்பூசை நடத்துதல் போன்றவை இப்பண்டிகையில் அடங்கும் சிறப்பம்சங்களாகும்.
- தோரணங்கள், அலங்காரப்பந்தல்கள், வெளிச்சக்கூடுகள், வாழ்த்து மடல்கள், விளக்கு வரிசைகள், மின்குமிழ் அலங்காரங்கள், கொடிகள் போன்றவற்றை பண்டிகைக்கு மேலும் அழகு சேர்ப்பனவாகும்.
- வெசாக் பண்டிகைகான ஆக்கங்கள் படைப்பதற்கு ரிசூத்தாள, குருத்தோலை, நிறக்கடதாசி, ஈர்க்கு, சிரட்டை உட்பட பல்வேறு பொருட்கள் மூலப்பொருட்களாக பயன்படுத்தப்படும்.
- முற்றத்தில் பல்வேறு தளவுருவங்கள் வரைந்து அவற்றின் வழியே வரிசையாக வெசாக் விளக்குகள் வைத்து அவ்விளக்குகளை ஏற்றுவதன் மூலம் அழகிய ஆக்கங்கள் அமைக்கப்படும்.
- கிராமப்புறங்களில் வாழைத்தண்டுகளில் வெவ்வேறு வடிவங்களில் வெசாக் விளக்குகள் ஏற்றுகின்றார்கள்.
- கடல் மாங்காய் காய்களும் வேறு காய் வகைகளும் விளக்கு வேலை அமைப்பதற்கு மாற்றுப்பொருளாக பயன்படுத்தப்படும்.

வினாக்கள்

1) வெசாக் பண்டிகையின் முக்கியத்துவம் என்ன?
2) வெசாக் பண்டிகைக்கு அழகு சேர்க்கும் சோடனை வகைகள் மூன்றைக் கூறுக?
3) வெசாக் சோடனைகளுக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் சிலவற்றைக் கூறுக?
4) பௌத்தமக்கள் வெசாக் பண்டிகையின்போது செய்யும் பூஜைவழிபாடுகள் இரண்டும் எவை?
5) வெசாக் பண்டிகையின்போது பௌத்தர்களிடத்தே விருத்தியடையும் மனப்பாங்குகள் எவை?

### தைப்பொங்கள்

- தைப்பொங்கள் பண்டிகை இந்துக்களின் முக்கியமான ஒரு சமயப் பண்டிகையாகும்.
- தைமாதத்தின் தமிழ் முதலாந்திகதி இப்பண்டிகை கொண்டாடப்படும்.
- இது ஆங்கில வருடத்தின்படி சனவரி 14 அல்லது 15 திகதி இடம்பெறும்.
- பண்டிகைக்கு முன்னர் வீட்டுத்தரை சுத்திகரிக்கப்பட்டு மாட்டுச் சாணம் கொண்டு மெழுகப்படும்.
- பின்னர் அதன் மீது மஞ்சட் பொடி, அரிசி மாவு போன்றவற்றால் மாக்கோலங்கள் அமைக்கப்படும்.
- கரும்பு, வாழைமரம், குருத்தோலை, மாவிலை, இஞ்சி இலை, மஞ்சல் இலை என்பவற்றால் வீட்டு வாயிலும் பொங்கல் பானையும் அலங்கரிக்கப்படும்.
- அக்கோலத்தின் மீது அடுப்பு மூட்டி பொங்கல் தயாரித்து படைக்கப்படும்.
- அக்கோலத்தின் மத்தியில் பூரண கும்பம் வைத்து குத்து விளக்கு ஏற்றி பொங்கல் தயாரித்து சூரியோதய வேளையில் பால், கரும்பு, கருப்பட்டி, பழங்கள், நெல் என்பன சேர்த்து சூரிய பகவானுக்குப் படைக்கப்படும்.

வினாக்கள்

1) தமிழ் மக்கள் தை மாதத்தில் கொண்டாடும் விழா எது?
2) தைப்பொங்கல் விழாவைக் கொண்டாட எவ்வாறான கலைப்படைப்புக்களை செய்வார்கள்?
3) ஆவற்றுக்காகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள் சிலவற்றைக் குறிப்பிடுக?
4) இப்பண்டிகையின் போது இந்துக்களால் செய்யப்படும் பூசை வழிபாடுகள் எவை?
5) தைப்பொங்கல் பண்டிகையின் போது இந்துக்களிடத்தே விருத்தியடையும் மனப்பாங்குகள் எவை?

**றம்ழான்**

- றம்ழான்பண்டிகை (ஈதுல்/பித்ர்-ஈகைத்திருநாள்) இஸ்லாமியர்களின் முக்கியமான ஒரு பண்டிகையாகும்.
  - இஸ்லாமிய நாட்காட்டியின் ஒன்பதாவது மாதமாகிய றம்ழான்மாதத்தில் இளம்பிறை காட்சியளித்தது தொடக்கம் பத்தாம் மாதமாகிய ஸவ்வால் மாதத்தின் இளம்பிறை காட்சியளிப்பது வரையிலான 29 அல்லது 30 நாட்களில் பகற் காலத்தில் உபவாசம் செய்து முடித்து (நோன்பிருந்து) ஸவ்வால் மாதம் முதலாம் நாளிலேயே இப்பண்டிகை கொண்டாடப்படும்.
  - உபவாசம்/நோன்பு என்பது அரபுமொழியில் ''ஸவ்ம்'' எனப்படும்.
  - உபவாசத்தின் போது அதிகாலைத் தொழுகைக்குரிய நேரம் ஆரம்பிப்பதற்கு சற்று முன்னரிலிருந்து சூரியன் மறையும் வரையிலான காலத்தில் உண்ணமலும் பருகாமலும் நோன்பை முறிக்கும் எந்தக் காரியத்தையும் செய்யாமலும் இருப்பது அவசியமாகும்.
  - நோன்பு இருக்கும் காலத்தில் பசியின் தாக்கம் உணரப்படுகின்றமையால் வறியோருக்கு உதவும் மனப்பாங்கு விருத்தியும் அடையும் எனவே அவ்வாறானோருக்கு உதவ முன்வருவர்.
  - இக்காலத்தில் முஸ்லீம்கள் அதிக தானஞ் செய்வார். இது அரபியில் ''ஸதகா'' எனப்படும். இது தவிர பொதுவாக வசதிபடைத்தோர் தமது கட்டாயக் கடமையான ''ஸகாத்'' வரியையும் இக்காலத்தில் கணக்கிட்டு வழங்குவதுமுண்டு.
  - பத்து வருடங்களுக்கு மேற்பட்ட வயதுடைய சித்த சுயாதீனமுள்ள முஸ்லீம்களான ஆண் பெண் இருபாலாரும் நோன்பு இருப்பது கட்டாய் கடமையாகும். நோயாளிகள், வயோதிபர்கள், கர்பிணிதாய்மார்கள், பாலுட்டும்தாய்மார்கள் போன்றோருக்கு விதிவிலக்கு உண்டு.
  - முஸ்லீம்கள் நோன்பு இருக்கும் காலத்தில் பகலிலும் குறிப்பாக இரவிலும் அதிகமாக தொழுகை, குர்ஆன் ஓதுதல் போன்றவற்றில் ஈடுபடுவார்.
  - றம்ழான் பொருநாள் தினத்தன்று ஸக்காத்தல் பித்ரா எனும் கொடுப்பது அவசியமாகும். தமது குடும்பத்தில் உள்ள உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தலா 2கிலோகிராம் அரிசி வீதம் கணக்கிட்டு அவ்வரிசியை ஏழைகளுக்குக் கொடுத்தல் ஸக்காத்தல் பித்ரா எனப்படும். இதனை பெருநாள் தலைபிறை கண்ட நேரம் முதல் மறுநாள் காலையில் பெருநாள் தொழுகை முடிவடைதல் வரையிலான காலப்பகுதியில் கொடுப்பார்.

**நத்தார்**


- நத்தார் எனும் போத்துகேய மொழிச் சொல்லிலிருந்து திரிந்தது. நத்தார் எனும் பதம் பிறப்பு எனப் பொருள்படும்.
- இலத்தீன் மொழியில் நத்தாலீர் எனும் பதத்தின் பொருள் பிறப்பு என்பதாகும்.
- ஊலகெங்கும் பரந்து வாழும் கிறிஸ்தவர்கள் இயேசுவின் பிறந்த தினத்தை நத்தார் எனக் கொண்டாடுகின்றனர்.
- இயேசு மனிதபிறவியெடுத்த தேவ புத்திரன் என்பது கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாகும்.
- இயேசு சமாதானத்தின் குமாரன் எனவும் அழைக்கப்படுகின்றார்
- இயேசு பிரானின் தாய் அன்னை மரியாள் ஆவார். பாதுகாவலர் பிதா ஜுசே ஆவார்
- குடிசன கனக்கெடுப்பில் பங்குகொள்வதற்காக பெத்தலகேம் வந்தபோது மாட்டுத்தொழுவத்தில் குழந்தை யேசு பிறந்ததாக கருதப்படுகின்றது.
- இயேசு பிரான் நிகழ்த்திய போதனைகள், நடாத்திய அற்புதங்கள், சட்டதிட்டங்கள் மீறல் போன்ற காரணங்களுக்காக ஜுதர் தலைவர்கள் அவருக்கு எதிராக கிளர்ந்தனர்.
- அக்காரணங்களுக்காக இயேசுபிரான் சிலுவையில் தொங்கவிடப்பட்டு கொல்லப்பட்டார்.
- பிரதி வருடமும் திசெம்பர்24 திகதி இரவு தேவாலயங்களில் ஒன்று திரளும் கிறிஸ்தவர்கள் இயேசுவின் பிறப்பை கொண்டாடுகின்றனர்.
- அன்றைய தினம் ஏழை எளியவருக்கு தானமளிப்பதும் சிறுவர்களுக்கு பரிசு பொருள்கள் வழங்குவதும் நத்தார் தின விசேட நிகழ்வுகளாகும்.
- இக்காலத்தில் நத்தார் பாடல்கள் , நத்தார் நாடகங்கள் , நத்தார் திரைப்படக்காட்சிகள் போன்றவைகள் இடம்பெறும்.

## தாதுகோபம் அமைப்பு

- இலங்கையிலுள்ள தாதுகோபங்களின் ''சதுரக்கோட்டம்'' எனும் அமைப்பு இந்தியாவிலுள்ள சாஞ்சித்தூபியின் ''கர்மிகா'' எனும் அமைப்பை ஒத்துள்ளது.
- தாதுகோபம் அண்டத்தின் தன்மைக்கு ஏற்ப ஆறு(06)வகைகளையுடையவையாகும். ஆவை


| | | | |
|---|---|---|---|
| 01. | தூனியக்குவியல் வடிவம்- | தானியக்கார – | களனி தாதுகோபம் |
| 02. | நீர்குமிழி வடிவம் - | பப்புளாகார - | ரூவென்வெலிசாய |
| 03. | மணிவடிவம் - | காண்டாகார - | தூபராம தாதுகோபம் |
| 04. | தாமரை வடிவம் - | பத்மாகார - | இலங்கையில் இல்லை |
| 05. | பானை வடிவம் - | கடாகார - | இலங்கையில் இல்லை |
| 06. | நெல்லிக்கனி வடிவம் - | அம்ளாகார | இலங்கையில் இல்லை |

## தாதுகோபத்தின் அமைப்பு











### இந்து கோயில் கட்டட அமைப்பு


- இந்து கோயில் மண்டபம் கற்பக்கிரகம, சுற்றுப்பிரகாரம், கோபுரம் என பிரதான பிரிவுகளைக் கொண்டது.
- இந்து ஆலயங்களில் மூர்த்தி அமைந்திருக்கும் கட்டடம் கற்பக்கிரகம், மூலஸ்தானம் , கருவறை எனும் பெயர்களால் அழைக்கப்படும்.
- வாசலிலுள்ள கோபுரம் கீழ் இருந்து மேல் நோக்கி ஒடுங்கி உயர்ந்து செல்லும் அமைப்பைக் கொண்டது. இதன் நான்கு பக்கங்களிலும் அதிகமான சிற்பங்கள் காணப்படும். ஊச்சியில் கலசம் காணப்படும்.
- ஆலய மண்டபங்களில் பல அலங்கார சிற்ப வேலைபாடுகளுடன் கூடிய தூண்களைக் கானலாம். இதன் நான்கு பக்கங்களிலும் வளைந்து தொங்கும் போதிகை அலங்காரம் காணப்படும்.
- சிவபொருமானின் வாகனமான கருங்கல்லால் நிர்மாணிக்கப்பட்ட நந்தியின் உருவச்சிலை இந்து ஆலயங்களிலும் காணலாம்.
- இலங்கையில் இந்துமத கட்டட நிர்மாணக்கலை மீது தென்னிந்திய கட்டட நிர்மாணக்கலை செல்வாக்கு செலுத்தியுள்ளது.
- ஆலயக் கர்ப்பக் கிரகம் மூன்று வகையான கட்டட அமைப்பில் நிர்மாணிக்கப்படுகின்றன. கர்பக்கிரகம் கருங்கல் அல்லது செங்கல் சுண்ணம்புச் சாந்து ஆகிய ஊடகங்களால் நிர்மாணிக்கப்படும்.
- கர்ப்பக்கிரகம் உபபீடம் அதிஸ்டானம், பாதவர்க்கம், பிரஸ்தானம், சிகரம்(விமானம்), தூபி ஆகிய அங்கங்களை கொண்டது.






**பள்ளிவாசல் - மஸ்ஜித்**

- இதன் நுழைவாயிலுக்கு நேர் மேலாக கட்டடத்தின் மேல் காணப்படும் கூர்நுனிப் பகுதியுடன் கூடிய விசாலமான கும்மட்ட வடிவுடன் கூடிய குப்பா எனப்படும் சிகரம் காணப்படும்.
- பள்ளிவாசல் இருமருங்கிலும் காணப்படும் விசேடமான உருளை வடிவை ஒத்த மிக உயரமான தூண்கள் காணப்படும் இது மினரத் எனப்படும். இதன் மேல் பிறையும் நட்சத்திரமும் காணப்படும்.
- பள்ளிவாசல்களில் விக்கிரகங்களோ ஓவியங்களோ காணப்படுவதில்லை.
- இங்கு எழுத்தணி முறையில் குர்ஆன் வசனங்கள் எழுதி அலங்கரிக்கப்பட்டு இருக்கும்




**கிறிஸ்தவ தேவாலயம்**


- கிறிஸ்தவத்தேவாலயங்கள் போத்துக்கேயரால் நிர்மாணிக்கப்பட்டவையாகும்.
- இலங்கையில் கிறிஸ்தவத்தேவாலயங்கள் உரோமன் மற்றும் கோதிக்கு எனும் 2 கட்டட முறைகளில் நிர்மாணிக்கப்பட்டு இருக்கின்றன.
- உரோமன்முறை


  தேவாலயங்களில் வளைவான கூரையையும் சாளரம் அரைவட்ட வடிவ வில்வளைவுகளாலும் ஆனது. இதன் பிரதான வாயிலுக்கு மேலே கண்ணாடியிலான வட்ட வடிவ சாளரம் காணப்படுகின்றது. இது Rose window எனப்படுகின்றது.


- கோதிக்கு முறை

  இங்கு கூர்முனையுடனான வில்வளைவுகளையும் இரு புறமாக குத்துச்சாய்வான கூரையும் கொண்டமைந்துள்ளது. இங்கு கூர்கொண்ட சாளரங்கள் நிறக்கண்ணாடிகளால் அழகு படுத்தப்பட்டுள்ளது.

- நிறக்கண்ணாடிகளில் கிறிஸ்தவ மதம் சார்ந்த காட்சிகள் காட்டப்பட்டுள்ளது.












**வினாக்கள்**


1) நத்தார் பண்டிகையைக் கொண்டாடும் மக்கள் இனத்தையும் கொண்டாடும் மதத்தையும் கூறுக?
2) நத்தார் பண்டிகையின் போது பயன்படுத்தப்படும் அலங்கரிப்பு வகைகளுள் நான்கினைக் குறிப்பிடுக?
3) நத்தார் பண்டிகை கொண்டாடும் நோக்கம் என்ன?
4) இப்பண்டிகைக் காலத்தில் இடம்பெறும் நற்செயல்கள் இரண்டினைக் குறிப்பிடுக?
5) நத்தார் பண்டிகைச் சோடனைகளுக்காகப் பயன்படுத்தும் மூலப்பொருள்கள் ஐந்தினை கூறுக?


## சில வரைதற் படங்கள்
















தயாரிப்பு:- திரு.தி.பிரசாத்,
ஆசிரியர்,
யா/மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்